RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI:10.34256/irjt21s234

OPEN ACCESS

# கம்பராமாயணத்தில் சமய நல்லிணக்கமும், ஏக இறைவனின் இயல்புகளும்

அ. ரேணுகாதேவி [அ, *]

[அ] தமிழியற்புலம், மதுரை காமராசர் பல்கலைக்கழகம், மதுரை-625021, தமிழ்நாடு, இந்தியா

# Religious Tolerance and Omnipotent God's Nature in Kamba Ramayana

A. Renugadevi [a, *]

[a] School of Tamil Studies, Madurai Kamaraj University, Madurai-625021, Tamil Nadu, India.

* Corresponding Author: rvsh76@gmail.com

Received: 04-01-2021
Revised: 10-04-2021
Accepted: 15-04-2021
Published: 30-04-2021

Check for updates

## ABSTRACT

In Kambaramanyanam Religious tolerance are Recording in some Kanda and Songs. Kamban prayer song is the best example for his Religious tolerance. Principles of Samna Religion, Christian Religions principle, Islamic Divine theories are also found in Kambaramayanam. In the way love inspiration Kamban and Islamic Religion teaches world human brotherhood and social Integration. Love bonded brotherhood gives the guidelines of one God, one Religion and One caste that is human beings. Equality Between ma is the essence of religious tolerance. The aim and objectives of their articles is to find out the religious tolerance and omnipotent God's Nature in Kambaramayanam.

**Keywords:** Kambaramanyanam, Kamban, Nature, God.

## முன்னுரை

கம்பராமாயணம் வைணவ சமயக் காப்பியமாகும். ஆயினும், கம்பன் பல சமயச் சிந்தனைகளையும் கம்பராமாயணத்தில் ஆங்காங்கே சுட்டிக்காட்டி இருக்கின்றான். இவை சமய நல்லிணக்கத்தையும் போதிப்பதாக அமைந்துள்ளன. கம்பனின் இறைநெறிக் கொள்கையை நோக்கும்போது ஏக இறைவனின் இயல்புகளே பேசப்படுவதைக் காணலாம். இதனைச் சமண, கிறித்தவ, இசுலாமிய இறைநெறிகளோடு ஒப்பிட்டு ஆராய்வதாக இவ்ஆய்வுக் கட்டுரை அமைகின்றது.

## கம்பனின் சமயப்பொறை

கம்பராமாயணம் முழுக்க முழுக்க வைணவக் காப்பியம்; ஆயினும், அனைத்துச் சமயச் சிந்தனைகளும் கம்பராமாயணத்தில் இடம்பெற்றுள்ளன. கம்பனின் சமயப்பொறைக்கு (சமய நல்லிணக்கம்) கம்பராமாயணத்தின் கடவுள் வாழ்த்துப் பாடலே தக்க சான்றாகும்.

"உலகம் யாவையும் தாமுள வாக்கலும்
நிலை பெறுத்தலும் நீக்கலும் நீங்கலா
அலகி லாவிளை யாட்டுடை யார்அவர்
தலைவர்; அன்னவர்க்கே சரண் நாங்களே"

கம்பர், இந்தக்கடவுள் வணக்கப் பாடலில் இறைவனின் பெயர், அவனது தன்மை, வடிவம் ஆகியனவற்றைப் பாடாமல் அனைவருக்கும் பொதுவான பரம்பொருளையே இறைவன் என வாழ்த்திப் பாடியுள்ளார். இப்பாடலில் முழுமுதற் பொருளாகிய இறைவனின் முத்தொழில் மட்டுமே கூறப்பெற்றுள்ளது. 'தலைவர்' என்னும் பொதுப்பெயரால் அனைவருக்கும் பொதுவான ஒரே இறைவனுக்குக் கம்பன் காப்புச் செய்யுள் படைத்துள்ளான். இதனால்தான்,

"ஆயிரம் தெய்வங்கள் உண்டென்று நம்பும் அறிவின்மை, நாமரூப பேதங்களை நம்பி 'இது என் தெய்வம், அது உன் தெய்வம்' என்று வழக்காடுகின்ற அறிவின்மை ஆகியன சமதர்மவாதியான கம்பனுக்கு உடன்பாடன்று; அதனால்தான் கம்பர், காப்பியம் முழுவதற்குமாக அமைந்த கடவுள் வாழ்த்துப்பாடலில் நாம, ரூப பேதங்களைச் சுட்டாமல் படைத்தல், காத்தல், அழித்தல் ஆகிய முத்தொழிலுக்கும் கர்த்தாவாகிய முதல்வனைத் 'தலைவர்' என்று பெயரிட்டு அழைத்து விடுவதாக" [2] ம.பொ.சிவஞானம் குறிப்பிட்டுள்ளார்.

கம்பன் சரணம் கூறும் இறைவன் எந்தவொரு குறிப்பிட்ட சமயத்தாருக்கும், இனத்தார்க்கும், நாட்டினர்க்கும் உரிமையாளன் அல்லன். அனைவராலும் ஏற்றுக்கொள்ளக்கூடிய ஒரு தலைவனாகிய இறைவனிடமே அவர் சரணம் அடைகின்றார். கம்பன் தன் வழிபடு தெய்வத்தைத் துதிக்காமல் நாடு, சமயம், இனம் என்னும் குறுகிய எல்லைகளைக் கடந்து, உலக மக்கள் அனைவரும் நேசிக்கின்ற தலைவனை வணங்குகின்றார். எந்த வடிவத்தையும் பெயரையும் சுட்டாமல், திணை, பால், எண், இடம் ஆகியவற்றைக் குறிப்பிடாமல் தனிப்பெரும் பரம்பொருளை வழிபடுகின்றார். இது கம்பரது சமயப்பொறைக்குப் பொருத்தமான சான்றாகும்.

கம்பராமாயணத்தில் பல பாடல்களில் ஆங்காங்கே இறைநிலைத் தத்துவங்கள் பேசப் பெற்றுள்ளன. அவை யாவும் ஏக இறைவனின் இயல்புகளையே எடுத்துரைக்கின்றன. உலகங் களை உண்டாக்கி அவற்றிற்குள் நின்று முதலும் முடிவுமற்று நிலைபெற்றிருக்கும் இறைவன் ஒப்பற்றவன்; அவன் காலத்தால் தனக்கு முன்னும் பின்னும் எவரும் இருக்கப்பெறாதவன்; அவனுடைய தொன்மை நிலை இத்தகையது என்பதைத் தெரிந்துகொள்ள முடியாதவன் என்பது கம்பனின் இறைக்கொள்கையாகும். இதனை மு.சாயபுமரைக்காயர்,

"தன்னுள்ளே உலகங்கள் எவையும்

தந்துஅவை

தன்னுள்ளே நின்று, தான் அவற்றுள்

தங்குவோன்

பின்இலன் முன்இலன், ஒருவன், பேர்கிலன்

தொல்நிலை ஒருவரால் துணியற் பாலதோ?"

எனவும்,

"உலகு தந்தானும் பல்வேறு உயிர்கள்

தந்தானும், உள் கூற்று

உலைவிலா உயிர்கள் தோறும் அங்கங்கே

உறைகின் றானும்"

எனவும் வரும் கம்பராமாயணப் பாடல்களை எடுத்துகாட்டி நுணுக்கமாக விளக்கியுள்ளார்.

## கம்பனின் சமணசமய இறைநெறி

கல்வியில் பெரியவனாகிய கம்பன் தான் வாழ்ந்த காலத்தில் தமிழ்நாட்டில் பரவியிருந்த சமயங்களை நன்கு அறிந்தவன் ஆவான். ஆதலால் சமண சமயத்தையும் அவன் அறிந்திருப்பான்

என்பதில் ஐயமில்லை. சமண சமயம் வினைக்கொள்கையில் அசைக்க முடியாத நம்பிக்கை கொண்டது. 'வினையே அனைத்து உயிர்களையும் ஆட்டிப் படைக்கின்றது; ஒரு பிறப்பில் ஒருவன் செய்தவினை அது நல்வினையாயினும் தீவினையாயினும், அவ் வுயிரைச் சென்றடைந்து உரிய பயனை விளைவிக்கும்' என்பதே சமண சமயத்தின் வினைக் கொள்கையாகும்.

இந்தச் சிந்தனையைக் கம்பன் தன் காப்பியத்தில் இயல்பாக நிகழும் ஒரு நிகழ்ச்சிக்கு உவமை கூறுவதன் வாயிலாக விளக்கிக் கூறியுள்ளான். உயிர்களைத் தொடர்ந்து செல்லும் வினைகள் தேவர், மனிதர், விலங்கு, நரகர் என்னும் நான்கு நிலைகளில் மரிமரிப் பிறக்குமாறு முல்லை நிலத்தைக் குறிஞ்சியாகச் செய்தும், மருதத்தை முல்லையாக மாற்றியும், பயன்குறைந்த நெய்தலை மருதமாகவும் மாறச்செய்து அந்தந்த நிலங்களுக்குரிய பொருள்களை எல்லாம் இடம்மாற்றி நிலங் களுக்குக் கொண்டு சென்று வினைக்கு இணையாக விளங்குகின்றது என்கின்றான் கம்பன். இதனை,

"முல்லையைக் குறிஞ்சி யாக்கி மருதத்தை

முல்லை யாக்கிப்

புல்லிய நெய்தல் தன்னைப் பொருவரு மருதமாக்கி

எல்லையில் பொருள்கள் எல்லாம்

இடைதடுமாறும் நீரால்

செல்லுறு கதியிற் செல்லும் வினையெனச்

சென்ற தன்றே"

என்னும் பாடலால் அறியலாம். ஊழ் வினையை மாற்ற நான்முகனாலும் முடியாது என்பதைக் கம்பன்,

"வாழ்வினை நுதலிய மங்கலத்துநாள்

தாழ்வினை அதுவர சீரை சாத்தினான்

சூழ்வினை நான்முகத்து ஒருவன் சூழினும்

ஊழ்வினை ஒருவரால் ஒழிக்கற் பாலதோ"

என்கின்றான்.

சமணர்களைப் பற்றிய குறிப்பும் கம்ப ராமாயணத்தில் காணப்படுகின்றது. இராவணன் மகன் இந்திரசித்தனை இலக்குவன் வென்றான். இனி இராவணனுக்கு வெற்றியில்லை என்பதை அறிந்த தேவர்கள் ஆடிப்பாடி மகிழ்ந்தனர். அளவற்ற மகிழ்ச்சியில் உடுத்தியிருந்த ஆடைகளையும் களைந்தெறிந்து ஆரவாரம் செய்தனர். அப்போது அவர்கள் சமணக் கடவுளரைப்போலக் காட்சியளித்ததாகக் கம்பன் பாடியுள்ளான்.

"வில்லாள ரானார்க் கெல்லாம் மேலவன்

விளிதலோடும்

செல்லாதவ் விலங்கை வேந்தற்கு

அரசெனக் களித்த தேவர்

எல்லாரும் தூசு நீக்கி ஏறிட ஆர்த்தபோது

கொல்லாத விரதத் தார்தம் கடவுளர் கூட்ட

மொத்தார்"

இப்பாடலில் கம்பன், சமணர்களைக் 'கொல்லாத விரதத்தவர்' என்றும், அவர்கள் போற்றி வழிபடும் தெய்வத்தின் தோற்றம் 'முற்றும் துறந்தநிலை' (நிர்வாணம்) என்றும் தெளிவாகக் குறிப்பிட்டுள்ளான்.

## கம்பனில் கிறித்துவம்

கி.பி.முதலாம் நூற்றாண்டிலேயே அதாவது சங்ககாலத்திலேயே இன்றைய கிறித்தவம் கூறும் சமயநெறிகள் தமிழ்நாட்டில் பரவியிருந்தன. இயேசுநாதரின் முக்கியச் சீடர்களுள் ஒருவராகிய தோமையப்பர் கி.பி.முதலாம் நூற்றாண்டிலேயே தமிழகத்திற்கு வந்து கிறித்தவ சமயத்தைப் பரப்பியிருக்கின்றார். ஆதலால் கி.பி.ஒன்பதாம் நூற்றாண்டினனாகிய கம்பன் கிறித்தவ சமயத்தையும் அச்சமயத்தின் கொள்கைகளையும் நன்கு அறிந்திருப்பான் என்பதில் ஐயமில்லை.

அன்புவழி, பகைவர்களிடம் அன்பு செலுத்துதல், பகைவர்களை மன்னித்தல், பாவச் செயல்களின் தன்மைகளை உணர்ந்து திருந்துதல் ஆகியன கிறித்தவ சமயத்தில் சிறப்பாகச் சொல்லப்படும் சமயம் சார்ந்த நல்லுரைகளாகும். மனத்திருப்பம், மனமாற்றத்தின் முக்கியத்துவத்தைக் கிறித்தவம் ஆழமாக வலியுறுத்துகின்றது. மனம் திருந்துவது அல்லது மனமாற்றம் பெறும் நிகழ்ச்சியைக் கிறித்தவம் "மறுபிறப்பு" என்றே சிறப்பித்துப் பேசுகின்றது. சிறியன சிந்தியாதானாகிய வாலியின் மனமாற்றத்தில் கம்பன் இதனை வெளிப்படுத்தியுள்ளான். வாலி, இராமனின் அம்பினால் இறக்கும் தறுவாயில் அவன் இராமனிடம் பின்வரும் வரத்தை வேண்டுகின்றான்.

*"மற்றினி யுதவி யுண்டோ வானினு முயர்ந்த*

*மானக்*

*கொற்றவ நின்னை என்னைக் கொல்லிய*

*கொணர்ந்து தொல்லைச்*

*சிற்றினக் குரங்கினோடும் தெரிவுறச் செய்த*

*செய்கை*

*வெற்றரசு எய்தி எம்பி வீட்டரசு எனக்கு*

*விட்டான்"*

இந்த இடத்தில் அதாவது இறக்கும் தறுவாயில் வாலி, தன் இளவலாகிய சுக்கிரீவன் செயலைப் புதியதோர் கோணத்தில் சிந்திக்கின்றான். 'இராமா! என் தம்பியாகிய சுக்கிரீவன் என்னைக் கொல்லுவதற்கு உன்னைக் கொண்டுவந்து வெறுமையான மண்ணரசை எடுத்துக்கொண்டு விண்ணரசை எனக்குத் தந்துவிட்டான்' என்கின்றான். இத்துடன் அமையாமல் சுக்கிரீவன் ஏதாவது தவறிழைத்திருந்தால் அவனை மன்னித்து விடுமாறும், தண்டிக்க வேண்டாம் என்றும் இராமனிடம் வேண்டுகின்றான்.

உயிர் நீங்கும் வேளையில் வாலிக்கு ஏற்பட்ட மனமாற்றம் நம்மைத் தத்துவப் பார்வையில் சிந்திக்க வைக்கின்றது. இயேசுநாதர் சிலுவையில் அறையப்பட்டிருந்த நேரத்தில் அவருக்கு இரண்டு பக்கங்களிலும் இரண்டு சிலுவைகளில் அறையப்பட்டிருந்த கள்வர் இருவருள் ஒருவன், தான் இழைத்துவிட்ட பழிச் செயலுக்கு நாணி தன்னொடு சிலுவையில் தொங்கிக் கொண்டிருந்த கொற்றவனைப் பார்த்து அருள்வேண்டிய நிகழ்ச்சி, வாலியின் இச்செயலோடு ஒப்புநோக்கத்தக்கதாகும்.

'யானே வழி' எனக்கூறி அதன்படி வாழ்ந்து காட்டிய இயேசுநாதரின் உயரிய பண்புகள் 'எல்லையில் பெருங்குணத்து இராமனிடம்' காணப்படுகின்றது.

## கம்பராமாயணத்தில் இசுலாமிய சமய இறைநெறி

கம்பராமாயணத்தில் ஆங்காங்கே இசுலாமியச் சிந்தனைகளும் காணப்படுகின்றன. இசுலாமிய சமயத் தத்துவங்களில் ஏகத்துவம், சமத்துவம், சகோதரத்துவம் ஆகியன இன்றி யமையாதனவாகும். இசுலாமிய சமயம் மனிதர் களுக்கிடையே சமத்துவத்தைப் போதிக்கின்றது; மனிதர்கள் அனைவரும் ஒரே இனத்தைச் சேர்ந்தவர்கள் மனிதர்களுக்கிடையே எவ்வித ஏற்றத்தாழ்வுகளும் இருக்கக்கூடாதென்று ‘திருக்குர்ஆன்’ தெளிவாகக் கூறுகின்றது. ‘உலக மக்கள் அனைவரும் ஒன்றே’ என்னும் உண்மையைத் ‘திருக்குர்ஆன்’ அளவு கடந்த நம்பிக்கையில் வலியுறுத்திக் கூறுகின்றது. இதனை,

“மனிதர்களெல்லாம் ஒரே ஆத்மாவிலிருந்து

படைக்கப்பட்டவர்கள்”

“மனிதகுலம் ஒரே இனந்தான்”

“மக்கள் அனைவரும் ஒரே பெற்றோரின்

சந்ததிகள்”

“மனிதர்கள் அனைவரும் ஒரே

சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள்”

எனத் திருக்குர்ஆன் வலியுறுத்துவதிலிருந்து அறியலாம்.

மசூதிகளில் நடைபெறும் தினசரி, வாரக் கூட்டுத்தொழுகைகளும், ஆண்டுக்கொரு முறை மேற்கொள்ளப்படும் புனித ஹஜ் பயணமும் இசுலாமியச் சகோதரர்களுக்கு நற்சான்றுகளாகும். மாநிலத்தின் மார்பிட மான மக்கமாநகரில் உலக மக்கள் அனைவரும் ஒரே இனமாக ஒன்று திரண்டு, ஒரே இறையை ஒரே முறையில் வழிபடும் தியாகத் திருநாளாகிய ‘ஹஜ்ஜுப் பெருநாளில்’ உலகச் சமத்துவத்தையும் சகோதரத்துவத்தையும் காண்கின்றோம். இத்தகைய உயர்ந்தாரும் தாழ்ந்தாரும் இல்லாத ஒத்துரிமைச் சமுதாயத் தைக் கம்பன் தன் காப்பியத்தில் படைத்துக் காட்டுகின்றான்.

‘பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்’ என்னும் வள்ளுவ நெறியைக் கம்பனும் பின்பற்றியுள்ளான். அரக்கர், வேடர், குரங்கினம், பறவை இனம் யாவரேயாயினும் அனைவரும் அன்பிலே பிணைக்கப்பட்ட சகோதரர்களே என்பதைக் கம்பன் தன் காப்பியத்தில் தக்க பின்புலங்களில் வெளிப்படுத்தி உள்ளான். ‘மனித இன ஒருமைப்பாட்டுணர்வு’ கம்பனிடம் மேலோங்கிக் காணப்படுகின்றது.

கம்பனின் காப்பியத் தலைவனாகிய இராமன் அன்புள்ளம் மிக்குக் கொண்டவன். தன்னோடு பிறந்த பரதன், இலக்குவன், சத்துருக்கன் ஆகிய சகோதரர்களைப் பெரிதும் நேசித்தவன். ‘தம்பியர் அல்லது தனக்கு வேறுயிர் இம்பரில் இல்லென’ நினைத்து வாழ்ந்தவன் இராமன். அவன் உடன் பிறந்தாரை மட்டுமின்றி, உலக மாந்தர்கள் அனைவரிடமும் ஒத்த அன்பு கொண்டு ஒழுகியவன். கங்கைக்கரையில் தன்னைச் சந்திக்கக் கடைக்குலத்து வேடனாகிய குகனையும், கிட்கிந்தையில் தன்னோடு நட்புப்பூண்ட குரங்கினத்துச் சுக்கிரீவனையும், பகைவனாகிய இராவணனின் பாசறையிலிருந்து வெளியேறி தன்னிடம் அடைக்கலம் புகுந்த அரக்கர் இனத்து வீடணனையும் இராமன¢தன் உடன் பிறந்த தம்பியர்களாகவே உள்ளப்பூர்வமாக ஏற்றுக்கொண்டவன். இதனைக்கம்பன்,

“குகனொடு மைவரானேம் முன்புபின்

குன்று சூழ்வான்

மகனொடு மறுவரானேம் எம்முழை

யன்பின் வந்த

அகனமர் காதலைய நின்னொடு மெழுவ

ரானேம்

புகலருங் கானந் தந்து புதல்வராற்

பொலிந்தா னுந்தை”

இவ்வாறு வேடர்குலத் தலைவனாகிய குகனையும், குரங்கினத்தைச் சேர்ந்த சுக்கிரீ வனையும் அரக்கர்குலத்து வீடணனையும் தம் சகோதரர்களாக ஏற்று, உலக சகோதரத் துவத்திற்கு வழிகாட்டியவனாக இராமன் திகழ்கின்றான்.

நபிகள் நாயகம் உருவாக்கிய சமத்துவச் சமுதாயத்தில் அரேபியாவின் உயர்ந்த குலமாகிய குறைஷி குலத்தில் தோன்றிய உமர் போன்றவர்களும், கருநிறத்தையும் தடித்த உதடுகளையும் கொண்ட நீக்ரோ இளைஞர் பிலால் போன்றவர்களும், பாரசீகர்களும் ஓரணியாய் ஒருங்கிணைந்து நின்றதைப்போல, கம்பராமாயணத்தில் இராமனது ஆளுமை வெளிப்பாட்டில் சகோதரத்துவத்தைக் காட்டு கின்றான் கம்பன். அன்பு ஒன்றே உலகத்தை ஓருலகம் ஆக்கும் ஆற்றல் கொண்டது; உலக மக்களை ஒரு குலமாக இணைக்கும் ஆற்றல் அன்புக்கு மட்டுமே உரியது. இந்த அன்பு வழியில் கம்பனும் இசுலாமும் உலகச் சகோதரத்துவத்தை, ஒருமைப்பாட்டை நிலைநாட்டியிருப்பதில் மிகுந்த ஒற்றுமை காணப்படுகின்றது.

## முடிவுரை

கம்பராமாயணத்தில் அனைத்துச் சமயங் களின் இறைநெறிகளும் இடம் பெற்றுள்ளன. ‘பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்’ என்னும் வள்ளுவ நெறியைக் கம்பன் தன் இறைநெறியாகக் கொண்டிருக்கின்றான். அன்பில் பிணைக்கப்பட்ட சகோதரத்துவம ஏக இறைவனின் இயல்பாகக் கம்பனில் வெளிப்பட்டுள்ளன.

## References

Gopalakrishnamachariyar, V.M., (2011) Kambaramayanam- Moolamum Uraiyum, Uma Pathippagam, Chennai, India.

Sayapu Maraikkayar, M., (2009) Revolution in Kamban, Gangai book store, Chenni, India

Sivagnanam, M.P., (1994) Kambar Kaviyinpam, Vanathi Pathippagam, Chenni, India

**Funding:** NIL
**Acknowledgement:** NIL
**Conflict of Interest:** NIL
**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The author 2021. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License